**O.S.No. 139/2016**

**date 25.06.2025**

**வா.சா.1 மாசிலாமணி**

**2,7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவாசொத்து எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து தான். மேற்படி சொத்துக்களை பெருமாள் மகன் ஆறுமுகம், வேதநாயகம், ஜான் வாத்தியார் மனைவி மேரி, ராஜாமணி ஆகியோர்களிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெறும்போது நானும் 2ம் பிரதிவாதியும் மட்டும தான் பணம் கொடுத்தோமா என்றால் 5 வாரிசுகளும் சேர்ந்து பணம்கொடுத்தோம். மேற்படி கிரையத்திற்கு நானும் 2ம் பிரதிவாதியும் மட்டும் தான் பணம் கொடுத்தோம் என்றாலும் மற்றவர்கள் பணம்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களில் 16வது அயிட்ட சொத்து தெற்கு குருவிகுளம் வருவாய் கிராமத்தை சார்ந்தது, மற்ற சொத்துக்கள் பழங்கோட்டை கிராமத்தை சார்ந்தது என்றால் சரிதான். தெற்கு குருவிகுளம் உள்ள சொத்தில் நான், நியூட்டன் சாமுவேல் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 16 வதுஅயிட்ட சொத்தில் தான் நான் ஹாலோபிளாக் கம்பெனி நிறுவியுள்ளோம் என்றால் சரிதான். பொதுவான இடத்தில் தான் நாங்கள் வீடு கட்டியுள்ளோம். மேற்படி வீடு, ஹாலோபிளாக் கம்பெனியில் 2ம் பிரதிவாதிக்கும் பங்குள்ளது என்றால் சரிதான். தாவா 16 வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் வருவாய் ஆவணத்தின் படி 1ஏக்கர் 61 செண்ட் என்றால் சரிதான். ஹாலோபிளாக் கம்பெனிக்கு பழங்கோட்டை கிராமத்தில் உள்ள சொத்துக்களில் இருந்து தண்ணீர் எடுக்கும்போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. கிணற்றுக்குசெல்லும் பாதையினால் தான் பிரச்சனை ஏற்பட்டது. ஹாலோபிளாக் கம்பெனிக்கு பழங்கோட்டை கிராமத்தில் உள்ள சொத்துக்களில் இருந்து தண்ணீர் எடுப்பது சம்பந்தமாக எனது மனைவி 2ம் பிரதிவாதியின் மீது காவல்நிலையத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அந்தோணி என்ற பஞ்சாயத்து தலைவர், மூக்கையா என்பவர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சைமன் பங்கு சொத்தையும் சேர்த்து 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

பழங்கோட்டை தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்களும் கூட்டாக தான் அனுபவம் செய்கிறோம். தாவா சொத்து விவரத்தில் எனது வீடு, ஹாலோபிளாக் கம்பெனியை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அனைத்தும் எனது தகப்பனார் காலத்திலேயே கயிர் வைத்து பிரித்து தனித்தனியாக பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. பழங்கோட்டை கிராமத்தில் உள்ள கிணற்றில் ஹாலோ பிளாக் கம்பெனிக்கு தண்ணீர் எடுப்பதில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொத்துக்களை பிரிக்கப்படவில்லை என்று பொய்யாக வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி அளித்த புகாரிலேயே சொத்துக்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி அந்தோணி, மூக்கையா முன்னிலையில் சொத்துக்கள் பிரிக்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவரது மனைவி தாவாசொத்துக்களில் ஒரு சொத்தை நன்கொடை எழுதிகொடுத்துள்ளார் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி அவரது மனைவிக்கு கொடுத்த நன்கொடை ஆவணத்திலேயே சொத்து பிரிக்கப்பட்ட விவரத்தினை கூறியுள்ளார் என்றால்சரியல்ல. 16 அயிட்ட சொத்தில் உள்ள வீடு, ஹாலோ பிளாக் சொத்தின் மதிப்பு ரூ.30லட்சத்திற்கு மேல் பெறும் என்றால் சரிதான். தனித்தனியாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டதின் அடிப்படையில்தான் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. பழங்கோட்டை கிராமத்தில் உள்ள கிணற்றில் ஹாலோ பிளாக் கம்பெனிக்கு தண்ணீர் எடுப்பதில் தான் பிரச்சனையால் தான் வழக்கு தாக்ல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துகளின் மதிப்பு சமூக மன்ற பண வரையறைக்கு அப்பாற்பட்டதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் பிரிக்கப்பட்ட சொத்துக்களை பிரிக்கவில்லை என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருடைய பாகத்தை பொறுத்த சொத்துக்களில் எலுமிச்சை பிச்சி பயிரிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதுஅல்ல என்றாலும், வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**